Tamil/Tamoul

# வழக்கமான குழந்தைப்பருவத் தடுப்பூசிகள்

**தீவிரமான, உயிருக்கு ஆபத்தான நோய்களில் இருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாக்க தடுப்பூசிகள் மிக முக்கியமான வழிமுறையாக விளங்குகின்றன.**

## குழந்தைப்பருவத் தடுப்பூசிகளின் நன்மைகள்

- கடந்த பல தசாப்தங்களாக, தடுப்பூசிகள் ஒவ்வோர் ஆண்டும் 3.5 முதல் 5 மில்லியன் இறப்புகளைத் தடுத்திருக்கின்றன.
- குழந்தைப்பருவத் தடுப்பூசிகள் தடுப்பூசியால் தடுக்கவல்ல 15 நோய்களுக்கு எதிராகப் பாதுகாப்பளிக்கின்றன.
- குழந்தைகள் தீவிரமான, உயிருக்கு ஆபத்தான, தடுப்பூசியால் தடுக்கவல்ல நோய்களின் பாதிப்புக்கு ஆளாக நேரிடுவதற்கு முன்னரே வாழ்க்கையில் தொடக்க நிலையிலேயே அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்குவதற்காக குழந்தைப்பருவத் தடுப்பூசி அட்டவணைகள் உருவாக்கப்படுகின்றன. அதிகபட்சப் பாதுகாப்பு அளிக்க சில தடுப்பூசிகளை ஒன்றுக்கு மேற்பட்ட டோஸ்கள் அளிக்க வேண்டியுள்ளது.
- தடுப்பூசிகள் உங்கள் உடல் தனது பாதுகாப்பை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

## தடுப்பூசி பாதுகாப்பு

- நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பதை விட அதற்கான தடுப்பூசி போட்டுக்கொள்வது பாதுகாப்பானது.
- அனைத்துத் தடுப்பூசிகளும் கனடாவில் பயன்படுத்தப்படுவதற்கு முன் பாதுகாப்பு, செயல்திறன், தரம் ஆகியவற்றை மதிப்பிடுகின்ற ஒரு மீளாய்வுச் செயல்முறைக்கு உட்படுத்தப்படுகின்றன. பயன்பாட்டிற்கு வந்த பிறகு தடுப்பூசிகளின் பாதுகாப்பும் செயல்திறனும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.
- தடுப்பூசி போட்ட பிறகு இலேசான பக்க விளைவுகள் ஏற்படுவது பொதுவானது. இவற்றில், பரபரப்பு, இலேசான காய்ச்சல், இலேசான வலி, தடுப்பூசி போட்ட இடத்தில் வீக்கம் அல்லது சிவத்தல் ஆகியவை உள்ளடங்கும். இந்தப் பக்க விளைவுகள் தற்காலிகமானவை, இதனால் கவலைப்பட வேண்டியதில்லை. இது உங்கள் குழந்தையின் உடல் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கி, நோயிலிருந்து அவர்களைப் பாதுகாக்க உதவுகிறது.

## உங்கள் குழந்தை ஒரு தடுப்பூசியைத் தவறவிட்டால்

- உங்கள் குழந்தையின் தடுப்பூசி அட்டவணையில் உள்ள ஏதேனும் தடுப்பூசியை நீங்கள் தவறவிட்டாலும் கூட, நீங்கள் அதை இன்னமும் போட்டுக்கொள்ளலாம். உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் அதைப் பற்றித் தெரிவித்தால், அந்த அட்டவணையைப் பின்பற்ற அவருடன் இணைந்து செயல்பட முடியும்.

**தடுப்பூசிகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், ஒரு சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் பேசவும் அல்லது Canada.ca/childhood-vaccines-ஐப் பார்வையிடவும்.**



Government of Canada Gouvernement du Canada

Canada

© கனடாவில் பதவிப்பொறுப்பில் உள்ள மாண்புமிகு அரசர், சுகாதார அமைச்சரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது, 2025
Pub: 240945 | Cat: HP40-358/2025Tam-PDF| ISBN: 978-0-660-76173-2